**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 38/2017**

திரு. தயாநிதி (D.W –7) **03.02.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து என்னுடைய தாத்தா ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அவருக்கு மனைவி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் வாரிசுகளாக இறந்த சமயத்தில் இருந்தார்கள் என்றால் ஆமாம். என்னுடைய தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவருடைய வாரிசுகளான இரண்டு மகள்கள், இரண்டு மகன்கள், மனைவிக்கு சென்றடையும் என்றால் தவறு. ராமசாமியின் ஒரு மகன் ரத்தினசாமி தாவா சொத்துக்களை ஐந்து பாகங்களாக பிரித்து ஒரு பாகத்தை அவருக்கு ஒதுக்கி தர வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். முருகம்பாளையம் சுத்திகரிப்பு நிலையத்தில் பிரின்ஸ் டையிங்கிற்காக 220 கேஎல் தண்ணீர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

2. ரத்தினசாமி பிரின்ஸ் டையிங் யூனிட்டில் ஒரு பங்குதாரர் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. ஆனால் அவர் பங்குதாரர் இல்லை. ரத்தினசாமி தாவாவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். என்னுடைய தாத்தா மற்றும் ரத்தினசாமி இருவரும் சேர்ந்து டிக் நிறுவனத்தில் கடன் பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை படித்துப் பார்த்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ– 29 ல் அடமான சொத்து அடமானம் வைக்கப்படும் போது ரத்தினசாமியும், ராமசாமியும் பங்குதாரர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் அது பொய்யான ஆவணம். அந்த ஆவணத்தில் என்னுடைய தாத்தாவும் கையொப்பம் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சாட்சி தனிச்சையாக முன்வந்து அது தன்னுடைய தாத்தாவின் கையெழுத்து இல்லை என்று கூறுகிறார்.

3. வா.சா.ஆ– 29 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரி. வா.சா.ஆ– 3 ராமசாமியும், ரத்தினசாமியும் பங்குதாரர்கள் என்று குறிப்பிட்டு பங்கு பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. அது ஆடிட்டர் சொல்லி பொய்யாக உருவாக்கிய ஆவணம் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார். வா.சா.ஆ– 3 ஏற்பட்ட காலத்தில் நான் சிறிய வயது உடைய நபர் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன் என்றால் சரி. ஆகையால் அந்த சமயத்தில் அந்த ஆவணம் ஆடிட்டர் சொல்லி ஏற்படுத்தப்பட்டது என்று வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு இராமசாமியும், சரஸ்வதியும் என்னிடம் அப்படித்தான் சொன்னார்கள்.

மேலும் குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர். கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.